பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
... பகுதி

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
# VALAMPURI

விலை
ரூபா 5.00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை (1[illegible]-1[illegible]-2000) தொ பேசி:- 3378 ஒலி: 294

## ★ அடுத்த ஆறு வருடங்களுக்கு
# ஆட்சியை அமைக்க போவது யார்?
# பொ. ஜ. ஐ. முன்னணியா? ஐ. தே. கட்சியா?

## இன்றைய வாக்களிப்பில் முடிவு தெரியும்

(நமது நிருபர்)

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அடுத்து வரும் ஆறு ஆண்டுகளுக்கு பதவியில் அமர்த்துவதற்கான வாக்களிப்பு இன்று நாடு முழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

196 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 5048 வேட்பாளர்கள் 29 அரசியல் கட்சிகள் சார்பிலும், 99 சுயேட்சைக்குழு சார்பிலும் தேர்தல் களத்தில் இறங்குகின்றனர்.

இன்று வரை 7 மணி முதல் பி-பகல் 4 மணி வரை நடைபெறும் வாக்களிப்பு 196 அங்கத்தவர்களும் யார் என்பதைத் தீர்மானிக்கவுள்ளது.

இலங்கையில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் ஏற்கனவே நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் பார்க்க இந்த தேர்தலிலேயே கூடுதலான வேட்பாளர்களும், கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன

196 உறுப்பினர்களையும், தேசியப்பட்டியலின் மூலம் தேர்வு செய்யப்படவுள்ள 29 போனஸ் உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்கு ஒரு கோடியே 20லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர் இவர்கள் வாக்களிப்பதற்கு சுமார் பத்தாயிரம் வாக்குச் சாவடிகள் நாடு பூராவும் அமைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமாகவும் நீதியாக

8ஆம் பக்கம் பார்க்க →

## அரசாங்கம் மோசடியில் ஈடுபட்டால் இலங்கையில் கிளர்ச்சி வெடிக்கும்

### ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

இன்று நடைபெறும் பொதுத் தேர்தலில் மோசடிகளில் ஈடுபட அரசாங்கம் முயற்சித்தால் ''யுகோசிலாவில் நிகழ்ந்தது போன்ற கிளர்ச்சி இலங்கையிலும் ஏற்படும்.

இவ்வாறு கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டின்

8ஆம் பக்கம் பார்க்க →

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

ஓயாத அலைகள் -4 நடவடிக்கையின் போது

- யாழ்அரசி (யோசப் சுதர்சினி) யாழ்ப்பாணம்
- மகிழ்இசை (சின்னத்தம்பி ஜெகதீஸ்வரி) யாழ்ப்பாணம்

8ஆம் பக்கம் பார்க்க →

## யாழ். செயலகத்திற்கு அதிஉச்ச பாதுகாப்பு

(யாழ்ப்பாணப்)

வாக்குகள் எண்ணும் பணிகள் யாழ். செயலகத்தில் திட்டமிட்டபடி இன்று இரவு நடைபெற உள்ளதால் அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்வதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ். செயலகத்திற்குள் நேற்று சென்ற பத்திரிகையாளர் உட்பட எவரும் அனும

8ஆம் பக்கம் பார்க்க →

## தமிழர்களைத் திருப்பியனுப்புவதை கண்டித்து ஜேர்மனியில் ஆர்பாட்டம்

(கொழும்பு)

அரசியல் அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களை இலங்கைக்கு திருப்பியனுப்பும் நடவடிக்கையைக் கண்டித்து இன்று ஜேர்மனியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

ஜேர்மன் ''டிசெல்ட் ஓவ்'' நகரில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள

8 ம் பக்கம்பார்க்க →

## நாகர்கோவில் தேடுதலின் போது படைத்தரப்பில் ஒருவர் பலி

### ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

நாகர்கோவில் பகுதியில் கடந்த 8ஆம் திகதி படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக விசேட ஊடக தகவல் நிலை

8 பக்கம்பார்க்க →

## யாழ். மாவட்டத்தில் வெளிநாட்டு செய்தியாளர்கள்

## லொறிகோரவிபத்தில் அதிபர் உட்பட

## யாழ். மாவட்டத்தில் வெளிநாட்டு செய்தியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்இன்று நடைபெறும் தேர்தல் நிலை பற்றி ஆராய்வதற்கு வெளி நாட்டு செய்தியாளர் குழு ஒன்று நேற்று யாழ். நகர் வந்துள்ளது.

இருபது பேர் கொண்டஇக் குழுவில் பி.பி.சி,ஏ.எவ்.பி., இத்தாலி, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் செய்தி

8ஆம் பக்கம் பார்க்க →

## மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால் அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டதுடன் அரச திணைக்களங்கள் யாவும் பூரணஸ்தம்பிதமடைந்தன.

வீதிகள் மக்கள் நடமாட்ட மற்று வெறிச்சோடிய நிலை

8ஆம் பக்கம் பார்க்க →

## மலையகத்தவர்க்கு குடியுரிமை பெற பிரபாவின் போராட்டமே காரணம்

தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்தும் போராட்டம் காரணமாகவே மலையக மக்களுக்குக் குடியுரிமை கிடைத்தது.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் டி. ஐயாத்துரை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் திம்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி வடக்கும் மலைய

[8ம் பக்கம் தொடர்ச்சி]

## லொறி கோர விபத்தில் அதிபர் உட்பட இருவர் துடிதுடித்துப் பலி

யாழ்ப்பாணம் காங்கேசன் வீதியில் இலங்கை மின்சார சபைக்கு முன்பாக நேற்று மாலை 6.20 மணியளவில் இடம்பெற்ற கோர லொறிவிபத்தில் நாவலர் மகாவித்தியாலயஅதிபர் உட்பட இருவர் பலியாகினர். ஐந்து பேர் காயமடைந்தனர். இக் கோர லொறி விபத்தில் நாவலர் மகாவித்தியாலய அதிபர் ஐயாத்துரை துரைராசா, மானிப்பாயைச் சேர்ந்த யோகநாதன் கியூபேட்(றதீஸ் வயது 28) ஆகிய இருவருமே பலியானவர்களாவர். இச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது; நேற்று மாலை 6.20 மணியளவில் யாழ்.நகரில் இருந்து அதிவேகமாக வந்த லொறி மனோகராச் சந்தியைத் தாண்டியதும் இலங்கை மின்சார சபைக்கு முன்பாக உள்ள மின் கம்பம் ஒன்றுடன் மோதி தடம் புரண்டது. (8ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் பகுதியில் நேற்று மோதல்

## 4 படையினர் பலி; 42 பேர் காயம்

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கிளாலிப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் மீது நேற்றுமாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத் தரப்பில் நால்வர் பலியாகியுள்ளதுடன் 42பேர் காயமடைந்துள்ளனர்.

இராணுவ நடவடிகை தலைமையகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் வசம் இருந்த மூன்று பாதுகாப்பு பங்கர்கள் படையினரால் மீள கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்லறி மற்றும் மோட்டார்த் தாக்குதலை புலிகள் மேற்கொண்டதாகவும் பதி

8ஆம் பக்கம் பார்க்க →

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ

## எம்மை எதிர்த்தவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவோம்

### ரணில் தெரிவிப்பு

[கொழும்பு].

நாம் ஆட்சிக்கு வந்தால் எம்மை எதிர்த்தவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவோம்.

அரசினால் கள்ளவாக்கு போட்டு இம்முறை வெற்றி பெற முடியாது. இதனை உறுதி செய்யும் வகையில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் குழு மற்றும் பிக்குமார் நீதியான தேர்தலை நடத்த முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

ஐக்கியதேசிய கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

எதிர்வரும் பொதுத்தேர்தலையடுத்து ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுவது உறுதி, எமக்குச் சார்பாக அவ்வாட்சி மாற்றம் ஏற்படும் என்பதில் யாருக்கும் இரு கருத்து இருக்க முடியாதென ரணில் விக்கிரமசிங்கஉறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டால் தங்களுக்கு அநீதி இழைக்கப்படும் என, தேர்தலில் எமக்கெதிராக வாக்களித்தோர் எண்ணத்தேவையில்லை.

இவர்களது உயிருக்கோ உடமைகளுக்கோ பாதிப்பு ஏற்பட நாம் விடமாட்டோம்.

மாற்றுக்கருத்துடையோரையும் எம்பக்கம் ஈர்ப்பதுடன் தவறுகள் புரிந்தோர்க்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதே வேளை தமக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று உருவாகியிருப்பதாக ஆளும் அரசு வெளியிட்ட குற்றச்சாட்டை வன்மையாக மறுத்துள்ளார்.

அத்துடன் புலிகளின் நடவடிக்கைகளை தாம் உடனுக்குடன் கண்டித்து வருவதாகவும் அவர்களது தாக்குதலில் தமது உறுப்பினர்கள் பல பலியாகியிருப்பதாகவும் தெரிவித்தார். (உ)

## எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது தொங்கு பாராளுமன்றமே அமையும்

### ராய்டர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில், பொதுஜன ஐக்கிய முன்னணியோ அன்றி ஐக்கிய தேசியக்கட்சியோ அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலையில் தொங்கு பாராளுமன்றம் ஒன்றே அமையும்.

அரசியல் விமர்சகர்களும், கருத்துக்கணிப்புகளும் மேற்படி முடிவினையே கூறி வருவதாக ராய்டர் செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முன்னுக்குப் பின் முரணான வகையில் கருத்துக்களை கூறிவருவதுடன், தமது அரசியல் நிலைப்பாடு தொடர்பாக ஸ்திரமற்ற கருத்துக்களை பரப்பி வருவதே இதற்குக் காரணம் எனவும் ராய்டர் செய்திஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## யாழ். நீதிவான் நீதிமன்றுக்கு கட்டுநிதி அனுப்பிவைப்பு

### பதிவாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்துக்கு பிணை வைப்புக்கள் மீளளிப்பதற்காக நீதியமைச்சு செயலாள காசோலையைப் பெற்றுக் கொள்ளுமாறும் நீதிமன்ற பதிவாளர் செல்வி கந்தசாமி மீரா தெரிவித்தார்.

## பொதுத் தேர்தலைக் கண்காணிக்க 'கல்விமான்கள் குழு' நடவடிக்கை

(கொழும்பு)

நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியானதாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு கல்விமான்கள் தொழிற் சங்க அமைப்பு முன்வந்துள்ளது.

வாக்களிப்பு தினத்தின் போது வன்முறைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகாமையில் குறைகேள் நிலையங்களை அமைக்கவுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இத்தேர்தலை கண்காணிப்பதற்காக பல்வேறு தொழில்சார் நிபுணர்கள் ஒத்துழைப்பு வழங்குவதற்கு சுமார் 1000பேர் வரையில் முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே கல்விமான்கள் குழு இக்கருத்துக்களை தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்காக அமைக்கப்படவிருக்கும் 10 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களுக்கே இக்குறைகேள் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணகங்ளில் தற்போது நிலவும் சூழ்நிலைக்கேற்ப தேர்தலை கண்காணிப்பதற்கென மாற்று வழிகளை கையாளவுள்ளதாகவும் இக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (வ)

## தனியார் பஸ் வண்டி விபத்தில் 12 பேர் படுகாயமடைந்தனர்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணம் செய்த தனியார் பஸ் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் 21 பேர் படுகாயமடைந்தனர்.

அதிவேகமாக பயணம் செய்த இந்த தனியார் பஸ் வண்டி வீட்டின் கூரை ஒன்றுடன் மோதியதாலேயேஇவ் விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் முகமாக சொந்த இடங்களிற்குத்திரும்பிக் கொண்டிருந்த வாக்காளர்களை ஏற்றிச் சென்றபோதே இவ்விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனம் செலுத்துவதில் சாரதியின் பரிச்சயமின்மையே இவ்விபத்திற்கு காரணமாகக் கூறப்படுகிறது. (க-வை)

## நற்கருணை கண்காட்சி நிறைவு

(யாழ்ப்பாணம்)

யூபிலி ஆண்டின் நற்கருணைக் கண்காட்சி நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியுடன் முடிவடைந்தது. கடந்த வியாழன் 5 ஆம் திகதி காலை இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் 9 மணிக்கு ஆரம்பமான இக்கண்காட்சியை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

113 கருப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு அருட்சகோதரிகளாலும் மறையாசிரியர்களாலும் விளக்கமளிக்கப்பட்டது. (க-12)

## மிதிவெடியில் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை விளான் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் தனது இடது காலை இழந்துள்ளார்.

குருநகரில் இருந்து இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டையில் வசிக்கும் கிறிஸ்தோப்பர் அமிர்தநாயகம் வயது (48) என்பவரே மிதிவெடியில் சிக்கி காலை இழந்தவராவர். (வ)

## பஸ் சேவைகள் சீரின்மை சாவ. இந்து மாணவர்கள் அவதி

(கல்வயல்)

இணுவில் மத்திய கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் பஸ் சேவைகள் சீரின்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலை முடிவதற்கிடையில் பஸ்கள் யாவும் சென்று விடுவதனால், மாணவர்கள் பெரிதும் சிரமமுறுகின்றனராம்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கவனம் எடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (க)

## யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகில் புதிய கற்கைநெறிகள் விரைவில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் புற நிலைப் படிப்புகள் அலகில் வெகுவிரைவில் 6 கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

48 மணித்தியாலங்களைக் கொண்டுள்ள தொடர்பியலுக்கான ஆங்கிலம், அலுவலக முகாமைத்துவம், நிர்வாக முகாமைத்துவம், ஈழத்து தமிழ் இலக்கியம், சூழல் முகாமைத்துவம், உயர் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுடைய எவரும் பங்குபற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிக்கான பதிவுகளை யாழ். பல்கலைக்கழகப்புறநிலைப்படிப்பலகில் மேகொள்ள முடியும் என்று மேலும் கூறப்பட்டுள்ளது. (க-12)

## தரிப்பு மணியில்லாததால் அவதிப்படும் மக்கள்

வைப்புக்கள் மீளளிப்பதற்காக நீதியமைச்சு செயலாளரிடமிருந்து கட்டுநிதி அனுப்பி வைக்கப்பட்டது. அனுப்பி வைக்கப்பட்ட பணம் உரியவர்களால் பெறப்பட்டு விட்டதாகவும் கீழ்வரும் பிணைகாரர்கள் மட்டும் இதுவரை தமக்குரிய பிணைப் பணத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர்களை உடனடியாக நீதிமன்ற அலுவலகத்துக்கு சமுகமளித்து ... சாமி மீரா தெரிவித்தார்.

சபாரத்தினம் இராஜேஸ்வரன் கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை கணபதிப்பிள்ளை இராசலிங்கம் தோப்புக் கொலனி, அச்சுவேலி மேற்கு. செல்வராசா ராணி புகையிரத நிலைய வீதி, கொடிகாமம். தனேஸ்வரன் ஆனந்தி 55, 5அம் மன் றோட் கந்தர்மடம்.

(க-12)

... யில் சிக்கி காலை இழந்தவராவர்.

(வ)

## ஐரோப்பிய கண்காணிப்பாளர் திருமலைக்கு நேரில் விஜயம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கையை கண்காணிக்கும் பொருட்டு ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த எட்டுக்கண்காணிப்பாளர்கள் நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளனர்.

இக் குழுவினர் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை நேரில் பார்வையிட்டதுடன் வாக்களிப்பு நிலையங்களுக்கும் சென்று தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர். என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

(கு-வ)

## விழிப்புலனற்றோர் விபரம் திரட்டல்

(மல்லாகம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தில் அங்கம்வகிப்போரின் தற்போதைய வதிவிட விபரங்கள் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கபட்டுள்ளதாக மேற்படி சங்கத்தலைவர் ஆர். சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இதுவிடயத்தில் சகலரும் ஒத்துழைப்பு வழங்குமாறும், இச்சங்கம் பழைய இடத்திலேயே தற்போதும் இயங்குகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-ப-14)

## வீதிகள் சீரின்மையால் மக்கள் பெரும் அவதி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணப் பகுதிகளில் சீரமைக்கப்பட்ட பல வீதிகளில் வெள்ளம் தேங்கிநிற்பதனால் போக்குவரத்திற்கு பெரும்சிரமம் ஏற்படுவதாக பாதிக்கப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆனைக்கோட்டை நவாலி வீதி, மற்றும் சங்கரத்தை வெளிப்பகுதியை உடைத்துச் செல்லும் வீதி ஆகியனவே மக்கள் பாவனைக்கு உதவாததாக காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

(க-59)

## நோயாளர் விடுதி புனரமைப்பு

(கல்வயல்)

மந்திகை ஆதார வைத்தியசாலை 6ம் இலக்க நோயாளர் விடுதி புனரமைப்புச் செய்யப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடுதிப் புனரமைப்புச் செலவினை பிரான்ஸ் வைத்தியகுழுவினர் (எம்.எஸ் எவ்) பொறுப்பேற்றனர்.

புனரமைப்புச் செய்யப்பட்ட இவ்விடுதி தற்பொழுது சகல வசதிகளுடனும் திகழ்வதைக் காணமுடிகிறது.

(செ-111)

## தரிப்பு மணியில்லாததால் அவதிப்படும் மக்கள்

(கல்வயல்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையில் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டியொன்றில் தரிப்பு மணியில்லாத காரணத்தால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பிரயாணம் செய்பவர்கள் தாம் இறங்கும் இடம் வந்ததும் நெருக்கடிக்குள் முண்டியடித்துக் கொண்டு பஸ் நடத்துனரை நாடவேண்டியுள்ளது.

சிலர் தாம் இறங்க வேண்டிய தரிப்பிடங்களை விடுத்து வேறு இடங்களில் இறங்கிய பின்னர் தமது இடங்களிற்கு நடந்து செல்கின்றனர். த-11


### சீமெந்து விலை மாற்றம்

டோக்கியோ சீமெந்துக் கம்பனியின் உற்பத்திப் பொருட்கள் விலை ஏற்றத்தினால் 'மிற்சுயி, அட்லஸ்' சீமெந்துகளின் விலையும் அதிகரித்துள்ளது. என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

புதிய மொத்த விலை

மிற்சுயி:- பக். ஒன்றின் விலை 575 ரூபா
(ஆகக் குறைந்தது 200 பக்கற்றுகள)

அட்லஸ்:- பக் ஒன்றின் விலை 540 ரூபா
(ஆகக் குறைந்தது 200 பக்கற்றுகள்)

தொடர்பு:-

ஜெசியா ஏஜென்சி,

135, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இ/867) T.P:- 2407

# வாக்காளருக்கான தேர்தல் சேவைகள்

தேர்தல் தினமான 10.10.2000 திகதி வாக்காளர்கள் தமது வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் யாழ்ப்பாணம் 10, பணிப்பின் பேரில் வடபிராந்திய போக்கு வரத்துச் சபையால் கீழ் குறிப்பிட்டபாதைகள் ஊடாக இலவச பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன தனியார் பேருந்துகளும் இச் சேவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும்.

### பேருந்தின் விசேட இலக்கம்

## 101 A, 101 B

சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்

(1) கோண்டாவில் மகாவித்தியாலயம்
(2) நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
(3) நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம்

### சேவையாற்றப்படும் பாதை

வட்டுக்கோட்டையில் இருந்து ஆரம்பித்து நவாலி, ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, ஊடாக நெல்லியடி சென்று மீண்டும் இதேபாதையால் வட்டுக்கோட்டை வந்தடையும்.

நேரம்

(1) வட்டுக்கோட்டை - நெல்லியடி 7 - 9
(2) வட்டுக்கோட்டை - நெல்லியடி 8 - 10
(3) வட்டுக்கோட்டை - நெல்லியடி 11 - 1-30
(4) வட்டுக்கோட்டை - நெல்லியடி 12-30 - 4

### பேருந்தின் விசேட இலக்கம்

## 102 A, 102 B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்

(1) மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி
(2) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
(3) கோண்டாவில் மகாவித்தியாலயம்
)4) அத்தியார் இந்துக்கல்லூரி
(5) நெல்லிய டி மத்தியமகாவித்தியாலயம்

### சேவையாற்றப்படும் பாதை

வட்டுக்கோட்டையில் இருந்து ஆரம்பித்து நவாலி, மானிப்பாய், மருதனார்மடச்சந்தி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, நெல்லியடி, மீண்டும் இதேபாதையால் வட்டுக்கோட்டையை சென்றடையும்.

நேரம்

| வட்டுக்கோட்டை | நெல்லியடி |
|---|---|
| 7-30 | 10 |
| 8-30 | 11 |
| 12-45 | 3-15 |
| 1-45 | 4-15 |

### பேருந்தின் விசேட இலக்கம்

## 103 A, 103 B

இச்சேவை இணைக்குப் வாககளிப்பு நிலையம் நிலையங் ள்

(1) சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்
(2) மானிப்பாய் இந்து மகளீர் கல்லூரி
)3) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
(4) நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
(5) நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

### சேவையாற்றும் பாதை விபரம்

வட்டுக்கோட்டையில் இருந்து ஆரம்பித்து சித்தன் கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, மருதனார்மடம் சந்தி, உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி, இதே பாதையால் மீண்டும் வட்டுக்கோட்டை திரும்பும்.

நேரம்:

வட்டுக்கோட்டை - நெல்லியடி - 7 - 9-15
வட்டுக்கோட்டை - நெல்லியடி - 9 - 11-15
வட்டுக்கோட்டை - நெல்லியடி - 11-30 - 2-10
வட்டுக்கோட்டை - நெல்லியடி - 2 - 4-15

நேரம்;-மூளாய் நெல்லியடி

| மூளாய் | நெல்லியடி |
|---|---|
| 8 | 10-10 |
| 9 | 11-10 |
| 12-45 | 2-55 |
| 1-45 | 4-00 |

விசேட இலக்கம்

## 106 A, 106 B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்

(1) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
(2) நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
(3) நெல்லியடி மகா வித்தியாலயம்

சேவையாற்றும் பாதை விபரம்;

இளவாலையிலிருந்து ஆரம்பித்து பண்டத்தரிப்பு, பிரான்பற்று, தொட்டிலடி, சண்டிலிப்பாய், உடுவில் மருதனார்மடம் சந்தி, உரும்பிராய் கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி, இதே பாதையால் இளவாலை திரும்பும்.

நேரம்;

| இளவாலை | நெல்லியடி |
|---|---|
| 7 | 9 |
| 7-30 | 9-30 |
| 11 | 1-25 |
| 11-55 | 4-00 |

### விசேட இலக்கம்

## 107A, 107B

இச் சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்

1) சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலம்
2) மானிப்பாய் இந்து மகளீர் கல்லூரி
3) கோண்டாவில் மத்திய மகா வித்தியாலயம்
4) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
5) நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

### சேவையாற்றும் பாதைகள்

இளவாலை, பண்டத்தரிப்பு, சித்தன் கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையூடாக இளவாலை

நேரம்

| இளவாலை | நெல்லியடி |
|---|---|
| 8 | 10-20 |
| 9 | 11-20 |
| 1-05 | 3-25 |
| 2-05 | 4-25 |

### விசேட சேவை இலக்கம்

## 108A, 108B

இச் சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்

1) மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி
2) கோண்டாவில் மகா வித்தியாலயம்
3) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
4) நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

### சேவையாற்றும் பாதை விபரம்

தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார் மடம் சந்தி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி மீண்டும் இதே பாதையில் தெல்லிப்பழை

நேரம்

| தெல்லிப்பளை | நெல்லியடி |
|---|---|
| 7 | 8-50 |
| 7-30 | 9-20 |
| 10-40 | 2-00 |
| 11-15 | 4-00 |

### பேருந்தின் விசேட இலக்கம்

## 109 A, 109 B

சேவை இணைப்பு வாக்களிப்பு நிலையம்

(1) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
(2) மானிப்பாய் இந்துமகளீர் கல்லூரி
(3) கோண்டாவில் மத்திய மகாவித்தியாலயம்

## காலையில் வாக்களிக்க வேண்டும்

(கொழும்பு)

இன்று நடைபெறும் பொதுத்தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் பொதுமக்கள், காலையிலேயே சென்று தமது வாக்குகளை அளித்து விட்டு உடன் வீடுதிரும்பிவிட வேண்டுமென தேர்தல் திணைக்களம் வேணடுகோள் விடுத்துள்ளது. (உ)

## ஆயுதங்கள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

பேராதனைப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களைப் பொலிஸார் மீட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் எட்டுப்பேரைக்கைதும் செய்துள்ளனர்.

கைதானவர்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரதேச சபை உறுப்பினரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட ஆயுதங்களில் கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகளும் அடங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-5)

## செல்வி

செல்வி ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக இருந்த காலத்தில், தோழி சசிகலா வுடன் கூட்டுச்சேர்ந்துஜெயா பப்ளிக்கேசன், சசி என்ற பிறைசஸ் நிறுவனங்களூடாக அரசுக்குச் சொந்தமான 'ரான்சி' நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கியதால் அரசுக்கு 4 கோடி 16 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

இதனைக் கண்டித்து சி. பி. சி. ஐ. டி. பொலிஸார் இவர்கள இருவர் மீதும், இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட ஏனைய பலர் மீதும் சென்னை தனிநீதிமன்றில் வழக்கு பதிவு செய்திருந்தனர்.

இக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில் மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜெயா பப்ளிக்கேசன் வழக்கில் 3 ஆண்டு சிறைத் தண்டனையும், சசி என்ரபிறைசஸ் வழக்கில் 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்புகள் இரண்டையும் ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்

வட்டுக்கோட்டை – நெல்லியடி – 7 - 9–15
வட்டுக்கோட்டை - நெல்லியடி – 9 - 11-15
வட்டுக்கோட்டை – நெல்லியடி – 11-30 - 2-10
வட்டுக்கோட்டை - நெல்லியடி – 2 - 4–15

**விசேட இலக்கம்**

## 104 A, 104 B

**இச் சவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்**

(1) சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்
(2) மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி
(3) கோண்டாவில் மகாவித்தியாலயம்
(4) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
(5) நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

**சேவையாற்றும் பாதை விபரம்**

மூளாயில் இருந்து ஆரம்பித்து சுழிபுரம், சித்தன் கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி இதே பாதையில் மூளாய் திரும்பும்

**நேரம்**

| | | |
|---|---|---|
| மூளாய் – நெல்லியடி | 7 – 9–15 | |
| மூளாய் – நெல்லியடி | 7-30 – 9-45 | |
| ,, ,, | 11–30 – 2–10 | |
| ,, ,, | 12–30 - 4 | |

**விசேட இலக்கம்**

## 105A , 105 B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்
(1) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
(2) கோண்டாவில் மகாவித்தியாலயம்
(3) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
(4) நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

சேவையாற்றும் பாதை விபரம்
மூளாயிலிருந்து ஆரம்பித்து, சுழிபுரம் சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில, மருதனார்மடம் சந்தி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி. அச்சுவேலி, நெல்லியடிஇதே பாதையால் மூளாய் திரும்பும்.

**சேவை இணைப்பு வாக்களிப்பு நிலையம்**

(1) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
(2) மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி
(3) கோண்டாவில் மத்திய மகாவித்தியாலயம்
(4) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
(5) நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

**சேவையாற்றும் பாதை விபரம்**

தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம் சந்தி, மானிப்பாய், தாவடி, கோண்டாவில், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி, மீண்டும் இதேபாதையால் தெல்லிப்பழை.

**நேரம்**

| தெல்லிப்பளை | நெல்லியடி |
|---|---|
| 8 | 10 – 15 |
| 9 | 11 – 15 |
| 1 | 3 – 15 |
| 1 – 55 | 4 – 10 |

**பேருந்தின் விசேட இலக்கம்**

## 110 A, 110 B

சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்
(1) சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்
(2) மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி
(3) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
(4) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
(5) நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

சேவையாற்றும் பாதை விபரம்
தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், கந்தரோடை, மாசியப்பிட்டி, தொட்டிலடி, சங்கானை, மானிப்பாய், தாவடி, மருதனார்மடம், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, நெல்லியடி, இதேபாதையூடாக தெல்லிப்பழை

நேரம்

| தெல்லிப்பழை | நெல்லியடி |
|---|---|
| 7 – 30 | 10 – 05 |
| 8 – 30 | 11 - 05 |

( 4 ஆம் பக்கம் பார்க்க)

யும் ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இவ் வழக்கில் தொடர்புடைய சசிகலா உள்ளிட்ட மேலும் சில முக்கியஸ்தர்களுக்கும் 3 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜெயலலிதா உட்பட 5 பேருக்கு10ஆயிரம் அபராதப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இத்தீர்ப்பில் இருந்துசெல்வி ஜெயலலிதா விடுபடா விட்டால் 6 ஆண்டுகளுக்கு எந்தத்தேர்தலிலும் இவர் பங்கு கொள்ள முடியா தென்பதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட மேற்படி தீர்ப்பினையெதிர்த்து மதுரை திருச்சி, வேலூர் பிரதேசங்களில் அவரது ஆதர்வாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற வேளை நூற்றுக் கணக்கானோரை பொலிசார் கைது செய்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து செல்வி ஜெயலலிதா எத்தவித கருத்தும் கூறாவதுடன், இன்று நடைபெறவிருந்த அ.இ.அ.தி.மு பொதுக்குழுக் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# வாக்காளர்களுக்கான தேர்தல் சேவைகள்

111 A, 111 B

செல்லும் வாக்களிப்பு நிலையம்:—
கோண்டாவில் ம. ம. வி. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, நெல்லியடி ம. ம. வி
பாதை விபரம்:—
யாழ். → திருநெல்வேலி → கோண்டாவில் ம.ம.வி → இருபாலை → நீர்வேலி → அச்சுவேலி → நெல்லியடி மீண்டும் அதே பாதையால் யாழ்ப்பாணம்.
புறப்படும் நேரம்:
7-00, 8-00, 10-30, 11-30, 2-25

112 A, 112 B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:—
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, நெல்லியடி ம. ம. வி
பாதை விபரம்:—
யாழ்ப்பாணம் → நல்லூர் → கல்வியங்காடு → நீர்வேலி → அச்சுவேலி → உடுப்பிட்டி → நெல்லியடி மீண்டும் அதே பாதையில் திரும்பி யாழ்ப்பாணம்
புறப்படும் நேரம் யாழ்:—
7-30, 11-00, 2-55, 8-30, 12-30

113 A, 113 B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:—
கோண்டாவில் ம. ம. வி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் ம. வித்தியாலயம்
பாதை விபரம்:—
யாழ் → நல்லூர் → கல்வியங்காடு → திருநெல்வேலி → கோண்டாவில் → தாவடி → மருதனார்மடம் → உடுவில் → மானிப்பாய் → சங்கானை. மீண்டும் திரும்பி அதே பாதையில் யாழ்.
புறப்படும் நேரம் யாழ்.:—
8-00, 9-00, 11-10, 12-35, 2-25

114

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:—
கோண்டாவில் ம. ம. வி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
பாதை விபரம்:—
வேலணை → யாழ் → திருநெல்வேலி → கோண்டாவில் → தாவடி → மானிப்பாய் → சண்டிலிப்பாய் உடுவில் → சங்கானை → மருதனார்மடம் → உரும்பிராய் கோப்பாய் → நீர்வேலி மீண்டும் திரும்பி அதே பாதையில் வேலணை
புறப்படும் நேரம்:—
வேலணை 7-00, 12-35

115

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்:-
நெல்லியடி ம. ம. வி,
பாதை விபரம்:—
பருத்தித்துறை → பொலிகண்டி → வல்வெட்டித்துறை → தொண்டைமானாறு → உடுப்பிட்டி → நெ. ம. ம. வி அதே பாதையால் பருத்தித்துறை.
புறப்படும் நேரம்;—
பருத்தித்துறை;- 7.00, 8.50, 10.40, 12.55, 2.45

117

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்க :—
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோண்டாவில் ம. ம. வி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்
பாதை விபரம்:—
பருத்தித்துறை, → பொலிகண்டி → வ. துறை, → உடுப்பிட்டி → தொண்டைமானாறு → அச்சுவேலி → நீர்வேலி

புறப்படும் நேரம் பருத்தித்துறை;—
7.00, 8.00, 11.30, 12.55

120

இச் சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;—
குடத்தனை அ. த. க. பாடசாலை, குடத்தனை கரையூர் அ. மி. த. க. பாடசாலை
சேவையாற்றும் பாதை விபரம்;—
பருத்தித்துறை → தும்பளை → கற்கோவளம் → வல்லிபுரம் → குடத்தனை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை
புறப்படும் நேரம் பருத்தித்துறை;—
7.00, 9.05, 12.00, 3.15

121

இச் சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;—
குடத்தனை அ. த. க. பாடசாலை, குடத்தனை கரையூர் அ. மி. த. க பாடசாலை
சேவையாற்றும் பாதை விபரம்;—
பருத்தித்துறை → மந்திகை → உபயகதிர்காமம் → வல்லிபுரம் → குடத்தனை. மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை.
புறப்படும் நேரம் பருத்தித்துறை;—
8.00, 10.30, 1.45

122

இச் சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;—
தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்
சேவையாற்றும் பாதை விபரம்;
அம்பன் → குடத்தனை → வல்லிபுரம் → தும்பளை மீண்டும் அதே பாதையில் அம்பன்.
புறப்படும் நேரம் அம்பன்;—
7.00, 9.00, 11.10, 1.45

123A 123B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;—
தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையம்
சேவையாற்றும் பாதை விபரம்;—
யாழ்ப்பாணம் → மானிப்பாய் → உடுவில் → தெல்லிப்பழை மீண்டும் அதே பாதையில் யாழ்
புறப்படும் நேரம் யாழ்;—
7.00, 9.20, 11.40, 2.25, 8.00, 10.20, 1.05.

124A 124B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;—
தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம்
சேவையாற்றும் பாதை விபரம்;—
பருத்தித்துறை → மந்திகை → கலிகை → நெல்லியடி → அச்சுவேலி → கோப்பாய் → மருதனார்மடம் → சுன்னாகம் → தெல்லிப்பழை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை
புறப்படும் நேரம் பருத்தித்துறை;—
7.00, 8.00, 11.00, 12.25.

125A, 125B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;—
தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம்
சேவையாற்றும் பாதை விபரம்;—
பருத்தித்துறை → பொலிகண்டி → வல்வெட்டித்துறை → உடுப்பிட்டி → அச்சுவேலி → கோப்பாய் → மருதனார் மடம் → சுன்னாகம் → தெல்லிப்பழை மீண்டும்; அதே பாதையில் பருத்தித்துறை
புறப்படும் நேரம் பருத்தித்துறை;—
7.00, 8.00, 11.00, 12.25

126

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்
நெல்லியடி ம. ம. வித்தியாலயம்
பாதை விபரம் - பருத்தித்துறை → மந்திகை → நெல்லி

## பனை மரம் வீழ்ந்ததில் இருவர் காயம்

(கல்வயல்)

பனை மரம் முறிந்து வீழ்ந்ததில் வீதியால் சென்ற இருவர் படுகாயமடைந்த சம்பவம் வரணி சுட்டி புரம் பகுதியில் அண்மையில் இடம் பெற்றது.

கொடிகாம பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியரான வரணியை சேர்ந்த செல்வம் என்பவரும் அவரது மைத்துனருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் தற்பொழுது மந்திகை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (க-110)

## நெற்பயிர்கள் சேதம்

(கல்வயல்)

வல்லலப்பகுதிகளில் வயல்களும், வயல் நிலங்களும் கட்டாக்காலிகளினால் அழிக்கப்படுகின்றன.

நெற் பயிர்களை ஆடுகளும், மாடுகளும் சேதப்படுத்துவதுடன், வயல் வரம்புகளும் இவற்றினால் சேதத்துக்குள்ளாகின்றன.

கால்நடைகளை வளர்ப்போரின் அசமந்தப் போக்கே இவ் அழிவுக்குக் காரணமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (த-111)

## இராசி பலன்

10. 10. 2000
[புரட்டாதி24செவ்வாய்]
துவாதசி பி.ப 1 30வரை
சதயம் மு.இ 7.09 வரை
ராகுகாலம் 3. 02 -4. 32
சுபநேரம் 10.32- 12 20
பிரதோச விரதம்

**மேடம்**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, தனலாப, கீர்த்தி.

**இடபம்**
நினைத்தகாரியம்கைகூடும். தொழில் அதிகாரம், அதிகாரிகள் சந்திப்பு, பணிவிடை.

**மிதுனம்**
வீண் பயம், உடல் உழைப்பு வயிற்றுக்கோளாறு, கட்டுப் படுதல்.

**கடகம்**
ஜலசம்பந்தமான நோய், உறவினர்கள் மனஸ்தாபம், காரியத் தாமதம்.

**சிம்மம்**
போசன சுகம், பிரயாணம், தனவரவு, கௌரவம் கிடைக்

பிரகாசம் மகா வித்தியாலயம்
பாதை விபரம்:—
பருத்தித்துறை, → பொலிகண்டி → வ. துறை, → உடுப்பிட்டி → தொண்டைமானாறு → அச்சுவேலி → நீர்வேலி → இருபாலை → கோண்டாவில் → தாவடி → மருதனார்மடம் → உடுவில் → மானிப்பாய் → சங்கானை மீண்டும் திரும்ப அதேபாதையால் பருத்தித்துறை.
புறப்படும் நேரம்:—
7-00, 8-00 1-05, 1-55,

118 A, 118 B

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;— நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் ம. வித்தியாலயம்

சேவையாற்றும் பாதை விபரம்;—
பருத்தித்துறை → மந்திகை → கலிகை → நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் → புறாப்பொறுக்கி → அச்சுவேலி→கோப்பாய்→மருதனார்மடம்→உடுவில் → மானிப்பாய் → சண்டிலிப்பாய் → சங்கானை . மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை
புறப்படும் நேரம் பருத்தித்துறை; -
7.00, 8.00, 11.30, 12.55

119 A, 119B

இச் சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்;— நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, கோண்டாவில் மகாவித்தியாலயம், மருதனாமடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்
பாதை ஒழுங்கு →
பருத்தித்துறை → மந்திகை → நெல்லியடி → அச்சுவேலி → நீர்வேலி → இருபாலை → கோண்டாவில் → தாவடி→மருதனார்மடம் → உடுவில் → மானிப்பாய்→ சங்கானை மீண்டும் அதே பாதையில் பருத்தித்துறை.

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையங்கள்
நெல்லியடி ம. ம. வித்தியாலயம்
பாதை விபரம் - பருத்தித்துறை → மந்திகை → நெல்லியடி ம.ம.வி மீண்டும் அதேபாதையால் பருத்தித்துறை
புறப்படும் நேரம்: பருத்தி - 7-00, 8-10, 9-20
10-30, 11-40, 1-35 2-45

127

இச்சேவை இணைக்கும் வாக்களிப்பு நிலையம்:
நெல்லியடி ம. ம. வித்தியாலயம்
பாதை விபரம்: நெல்லியடி ம. ம. வி. →குஞ்சர் கடை → உடுப்பிட்டி → வல்வெட்டித்துறை → நெல்லியடி → திக்கம் → வதிரி → நெல்லியடி ம. ம. வித்தியாலயம் (வட்ட ஓட்டப் பாதை)
புறப்படும் நேரம்: நெல்லியடி ம. ம.வி. 7-00, 8-15
9-30, 10-45, 12-55 2-00

தீவகத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர் செல்வவற்கு வசதியாக யாழ் பேருந்து நிலையத்திலிருந்து பின்வருமாறு வாகனஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

காலை ந.ப

129

யாழ்ப்பாணம்→வேலணை→ஊர்காவற்துறை
புறப்படும் நேரம் யாழ்.
9.00, 12.00

130

யாழ்ப்பாணம்→ வேலணை→ஊர்காவற்துறை
புறப்படும் நேரம் யாழ்.
10 00, 1.00

★ குறிப்பு;-வரணி, நெல்லியடி மகாவித்தியாலயத்துக்கு 128 ஆம் இலக்க பஸ் சேவை இடம் பெறும்.

தெரிவத்தாட்சி அலுவல௱

தேர்தல் மாவட்ட இல: 10, யாழ்ப்பாணம்.

(கி-874)

காரியத் தாமதம்.

சிங்கம்

போசன சுகம்,பிரயாணம், தனவரவு,கௌரவம் கிடைக்கும்.

கன்னி

எதிரிகளால் நன்மை, சந்தோசமான செய்தி, தனவருவாய்,நோய்குணமடைதல்.

துலாம்

சிறுரோகம்,மனக்கிலேசம், புத்திரர்களால்கவலை,காரிய இடையூறு.

விருச்சிகம்

தாழ்ந்த நிலை,காரிய நம்பிக்கைக் குறைவு, தாய்வழி உறவு.

தனுசு

சுவாரஸ்யம், குடும்பசுகம், பிரயாணம், முயற்சி பலிதம்.

மகரம்

மதிப்புக்குறைதல், காரியத் தாமதம், தனவிரயம், வாக்குக் கலகம்.

கும்பம்

உல்லாசம்,படுக்கை வசதி, போசன சுகம்,தெளிவான சிந்தனை.

மீனம்

பிரயாணம், காரியத்தாமதம், தனவிரயம், அமைதியின்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## சிஹல உறுமய கட்சிக்கு ஆதரவாக கத்தோலிக்க மதகுரு செயற்பட்டுவருகிறார்

(கொழும்பு)

பேரினவாதக் கட்சியான சிஹல உறுமயவிற்கு ஆதரவாக, மக்களின் அபிமானத்தைப் பெற்ற கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவர் செயற்படுவதாக 'எம்மவுஸ்' எனும் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இயங்கும் இவ்அமைப்பு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

புவுதுவ எனும் கத்தோலிக்க அமைப்பைச்சேர்ந்த வண ஒஸ்பார் அரியரத்னஅடிகளார் சிஹல உறுமயவுடன் நட்புறவு கொண்டுள்ளதுடன் கத்தோலிக்க மக்களையும் அதற்கு ஆதரவு செலுத்தும்படியும் கோரிவருகிறார்.

பெளத்த மதத்திற்கு எதிரான கொள்கைகளையுடைய ஒரு கட்சியுடன் கத்தோலிக்க பாதிரியார் இணைந்துசெயற்படுவது மன்னிக்கமுடியாதது எனவும் அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## இடைக்காலப்படி கூட்டுறவு துறையினருக்கு வழங்கப்படவேண்டியது அவசியமாகும்

### சி. வி. கே. சிவஞானம் அவசர 'பக்ஸ்'

(யாழ்ப்பாணம்)

அரச துறையினரைச் சேர்ந்தவர்களுக்குநிபந்தனை எதுவுமின்றி இடைக்காலப்படி வழங்கப்படுகிறதோ அவ்வாறே கூட்டுறவு துறையினருக்கும் வழங்கப்படுவது அவசியமாகும்

மேற்கண்டவாறு யாழ். ப.நோ. கூ சங்க தலைவர் சி.வி.கே. சிவஞானம் கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிய அவசர பக்ஸ் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இச்சுற்றறிக்கையின் அமுலாக்கம் இச்சங்கத்தின் ஆளணி உப-சபையில் 30.9.2000 திகதியும், யாழ். மாவட்ட விவசாய உற்பத்திச் சங்க கூட்டுறவுச் சங்கங்களின் சமாச இயக்குநர்சபைக் கூட்டத்தில் 01 10 2000 ம் திகதியும் ஆராயப்பட்டு பின் வரும் தீர்மானம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை மூலம் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவு கூட்டுறவு ஊழியர்களுக்கு மட்டும் கொடுக்கப்படும் ஒன்றல்ல பொதுச் சேவை ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், ஒய்வூதியர்கள் என சகல தரப்பினருக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைச் சமாளிக்கும் பொருட்டு தேசிய ரீதியில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஒன்றாகும். இவ் பமீட்டல் என்ற நிபந்தனை ஏனையோர்க்கு விதிக்கப்படவில்லை.

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு மட்டும் நிபந்தனை விதிப்பது அவர்களை இரண்டாம் தரப் பணியாளர்களாக்கி அவமானப்படுத்துவதற்கு சமமானதாகும்.

எனவே, இந்த கொடுப்பனவுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவற்றையும் நீக்கி விடும்படி வேண்டப்படுகின்றது.

இந்த விடயம் சம்பந்தமாக எமது 19 8.2000ம் திகதி கடிதத்திற்கும் தங்கள் அவதானம் கோரப்படுகிறது.

பதவி நிர்ணயம் செய்யப்படாத பல பணியாளர்கள் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலும் உள்ளனர். பதவி நிர்ணயம் செய்யப்படவில்லையென்பதற்காக அவர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவை மறுத்து, பதவி நிர்ணயம் செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் வழங்குவது எந்தவகையிலும் நியாயமானதாக அமையாது பாகுபாடாகவே அமையும்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல பதவி நிர்ணயம் செய்யப்படாமைக்கு, பணியாளர்களிலும் பார்க்க, சங்க நிர்வாகங்களும், கூட்டுறவுத் திணைக்களமும்,கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுமே பொறுப்பு, அப்படியிருக்க பணியாளர்களைக் தண்டித்தல் நியாயப்படுத்தக் கூடியதல்ல.

எனவே, பதவி நிர்ணயத்தை இடைக்காலக் கொடுப்பனவுடன் தொடர்புபடுத்தாது இரண்டையும் தனித்தனியாக கையாள்வதே பொருத்தமானது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

அரச அலுவலர் என்ற ரீதியில் தாங்களும், ஓய்வூதியர் என்ற வகையில் நானும் நிபந்தனை எதுவுமின்று

## இடம்பெயர்ந்தோருக்கான வாக்களிப்பு நிலையங்களின் பெயர் விபரங்கள்

சாவகச்சேரி, கிளிநொச்சி, பருத்தித்துறை வாக்கெடுப்புப் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களின் வசதி கருதி தற்போதைய மாற்றப்பட்ட வாக்களிப்பு நிலையங்களும், அவற்றில் உள்ள வழமையான வாக்களிப்புநிலையங்களின் பெயர்களும், அதன்வாக்கெடுப்பு மாவட்ட இலக்கமும், அவற்றில் உள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தொடர் இலக்கமும் கீழே தரப்பட்டுள்ளது.

### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

சாவகச்சேரிப் பிரிவு

| | வாக்கெடுப்பு மாவட்ட இல. | | | | வாக்காளர் அட்டை இல. |
|---|---|---|---|---|---|
| மீசாலை வீரசிங்கம் மகா வித்தி | 10 | 1-1512 | கொடிகாமம் திருநாவுக்கரசு | 30 | 1-2503 |
| மீசாலை வீரசிங்கம் மகாவித்தி | 11 | 1-1729 | கொடிகாமம் திருநாவுக்கரசு | 33 | 1-1321 |
| மீசாலை வீரசிங்கம் மகாவித்தி | 28 | 2-1276 | விடத்தல்பளை கமலாசனி வித்தி | 31 | 1-1228 |
| மீசாலை வீரசிங்கம் மகாவித்தி | 29 | 1-1356 | கச்சாய் அ. த. க. பாடசாலை | 32 | 1-1459 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 12 | 1-1139 | கொடிகாமம் அ. த. க. பாடசாலை | 34 | 1-1575 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 13 | 1-1154 | எழுதுமட்டுவாள் வடக்கு அ.த.க.பாட | 35 | 1-668 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 20 | 1-1192 | எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேசா | 36 | 1-1206 |
| கல்வயல் சண்முகநாதன் வித்தி | 14 | 1-1431 | உசன் இராமநாதன் மகாவித்தி | 37 | 1-378 |
| சாவகச்சேரி றிபேக் கல்லூரி | 18 | 1-1830 | உசன் இராமநாதன் மகாவித்தி | 38 | 1-681 |
| சாவகச்சேரி றிபேக் கல்லூரி | 19 | 1-1377 | வரணி சைவப்பிரகாச வித்தி | 39 | 1-1011 |
| சந்திரபுரம் சாந்தநாயகி வித்தி | 23 | 1-1117 | கரம்மைக்குறிச்சி அ. த. க. பாட | 40 | 1-952 |
| மட்டுவில் கமலாசனி வித்தி | 24 | 1-952 | வரணி மகாவித்தியாலயம் | 41 | 1-635 |
| மட்டுவில் சந்திரமௌலீச வித்தி | 25 | 1-1148 | நாவற்காடுகணபதிப்பிள்ளைத.க.பாட | 42 | 1-1218 |
| சரசாலை தெற்கு. சரஸ்வதி வித்தி | 26 | 1-1229 | வரணி மகா வித்தியாலயம் | 43 | 2-2009 |
| சரசாலை கணேசா வித்தி | 27 | 1-1082 | வரணி மகா வித்தியாலயம் | 44 | 1-2112 |

### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

கிளிநொச்சிப் பிரிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேம்பொடு கேணி மகா வித் | 03 | 1-850 | பளை மகா வித்தியாலயம் | 04 | 1-1930 |
| வேம்பொடு கேணி மகாவித் | 07 | 1-905 | கிளாலி றோ. க. த. க. பாடசாலை | 02 | 1-589 |
| வேம்பொடு கேணி மகாவித் | 08 | 1-581 | சோரன்பற்று கணேசா வித்தி | 06 | 1-1246 |

### நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

சாவகச்சேரி பிரிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கைதடி குருசாமி வித்தியாலயம் | 01 | 1-1730 | கைதடி விக்கினேஸ்வரா வித் | 04 | 1-2001 |
| கைதடி முத்துக்குமாரசாமி வித் | 02 | 2-1196 | | | |

### உடுவில் இராமநாதன் கல்லூரி

சாவகச்சேரி பிரிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கைதடி முத்துக்குமாரசாமி வித் | 03 | 1-1348 | நுணாவில்மேற்கு அ.த.க பாடசாலை | 15 | 1-1864 |
| நாவற்குழி மகா வித்தியாலயம் | 05 | 1-1218 | நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை | 16 | 1-1152 |
| நாவற்குழி மகா வித்தியாலயம் | 06 | 1-1408 | கைதடி நுணாவில் அ.த.க. பாட | 21 | 1-1794 |

சாவகச்சேரி பிரிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கைதடி முத்துக்குமாரசாமி வித் | 03 | 1-1348 | நுணாவில்மேற்கு அ.த.க பாடசாலை | 15 | 1-1864 |
| நாவற்குழி மகா வித்தியாலயம் | 05 | 1-1218 | நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை | 16 | 1-1152 |
| நாவற்குழி மகா வித்தியாலயம் | 06 | 1-1408 | கைதடி நுணாவில் அ.த.க. பாட | 21 | 1-1794 |
| மறவன்புலோ சகலகலாவல்லி வித் | 08 | 1-1431 | மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாட | 22 | 1-1828 |
| தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை | 09 | 1-603 | | | |

## கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்

கிளிநொச்சிப் பிரிவு

| | | |
|---|---|---|
| பளை மகா வித்தியாலயம் | 01 | 1-727 |

## சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்

சாவகச்சேரிப் பிரிவு

| | | |
|---|---|---|
| நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை | 17 | 1-1488 |

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

கிளிநொச்சிப் பிரிவு

| | | |
|---|---|---|
| பளை மகா வித்தியாலயம் | 05 | 1-1315 |

## மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி

சாவகச்சேரி பிரிவு

| | | |
|---|---|---|
| கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித் | 07 | 1-507 |

## தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்

பருத்தித்துறை பிரிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாகர்கோவில் அ.மி.த.க. பாட | 28 | 1-1347 | ஆழியவளை இல.கி.த.க. பாட | 33 | 1-503 |
| செம்பியன்பற்று அ.மி.த.க. பாட | 29 | 1-1102 | வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா | 34 | 1-891 |
| தாளையடி றோ.க.த.க. பாட | 30 | 1-670 | போக்கறுப்பு றோ.க.த.க. பாட | 35 | 1-252 |
| மருதங்கேணி இ.த.க. பாட | 31 | 1-947 | சுண்டிக்குளம் உபதபால் அலுவலகம் | 36 | -116 |
| உடுத்துறை பாரதி ச.ச. நிலையம் | 32 | 1-899 | | | |

**தெரிவத்தாட்சி அலுவலர்**

தேர்தல்மாவட்ட இல: 10, யாழ்ப்பாணம்

(கி-874)

அரச அலுவலர் என்ற ரீதியில் தாங்களும், ஓய்வூதியர் என்ற வகையில் நானும் நிபந்தனை ஏதுவுமின்று இடைக்காலப்படி பெறும் போது கூட்டுறவுத் துறை சார்ந்த இந்தப் பணியாளர்களுக்கு அதை மறுப்பது மனசாட்சிக்கே விரோதமானது என்பதை தாங்களும், ஆணைக்குழுவும் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இவ்வாறு 'பக்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

நாடுபூராகவும்இன்று நடைபெறும் தேர்தலை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் வீதிகள் எங்கும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ்கள் பலவும் தேர்தல் கடமைக்காக பயன்படுத்தப்பட்டுவருவதுடன் இராணுவத்தினரின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (க-12)

### இன்று ஒரு தகவல்

## ஞாபக மறதியால் திண்டாடிய விஞ்ஞானி

உலகப் புகழ்பெற்ற அறிவியல் அறிஞரான தோமஸ் அல்வா எடிசனுக்கு ஞாபக மறதி.

ஒருநாள் வருமானவரி கட்டுவதற்காக அந்த அலுவலகத்திற்குச் சென்றார். அங்கு சனக்கூட்டம் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது.

எடிசன் நின்று களைத்துப் போனார் இவர் வரி கட்டுவதற்குரிய கியூ வரிசை அண்மித்தது. அலுவலகமுகாமையாளர் எடிசனை ஏறிட்டுப்பார்த்தார்.

எடிசன் நீங்கள் அனுப்பிய அறிவித்தலை கையோடு எடுத்து வர மறந்து விட்டேன் என்றார். என்னசெய்வது என்று எடிசன் தலையைப்பிய்த்துக் கொண்டிருந்தார்.

''பரவாயில்லை உங்கள் பெயரைச் சொல்லுங்கள் அது போதும்'' என்று அலுவலக முகாமையாளார் கூறினார்.

எடிசனின் ஞாபக மறதியால் அவர் தம் பெயரையே மறந்திருந்தார். ''ஐயோ எத்தனை நேரம் காத்திருந்து இந்த இடத்தை வந்தடைந்தது கூட இல்லாமல்,சீ இந்த மூளை பெயரையே மறந்து விட்டது, என்றுதனக்குள்ளே திணறிக் கொண்டிருந்தார்.

அப்போது அவருடைய நண்பர் ஒருவர்வந்தார்.

என்ன எடிசன்!

இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள் எதாவது செய்ய வேண்டுமா என்று கேட்டார்.

உடனே எடிசனுக்கு தன் பெயர் நினைவு வந்ததாம் பாருங்களேன். எந்த பெரிய ஒரு விஞ்ஞானியான எடிசனுக்கே அவரது முதுமைக் காலத்தில் ஞாபகமறதி ஆட்கொண்டது என்றால் நாமமெல்லாம் எங்கே.

தூண்டி

யூகோசிலாவியாவில்

# முன்னாள் தலைவர் தப்பிஓட்டம்

# தேர்தலில் வந்தவர் பதவியேற்பு

யூகோசிலாவியாவில் புதிய அதிபராக வோஜிஸ்கிளார் காப்டில் ஸ்ராவ் பதவியேற்றதும் முன்னாள் அதிபர் விமானம் மூலம் தப்பியோடினார்.

பெல்கிறேட்டிலுள்ள செய்தியூடகங்கள் இதனை வெளியிட்டன.

எதிரணியைச் சேர்ந்த ஸ்ராவ் பதவியை ஏற்றதாக வானொலி மூலம் அறிவித்ததும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வீதிகளில் ஆரவாரித்து ஊர்வலங்கள் நடத்தினர்.

இதே வேளை பதவியை இறுகப் பிடித்திருந்த அதிபர் நாட்டை விட்டே விமான மூலம் தப்பி ஒடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

மேலை நாடுகளைப் போல் யூகோசிலாவியாவிற்கும் தேர்தல் மூலம் கிடைத்த வெற்றியை ரஷ்யா தான் வரவேற்பதாக அறிவித்துள்ளது.

இதற்கிடையில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சரும் யூகோசிலாவியாவிற்குச் சென்று நாட்டின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

யூகோசிலா வியாவின்புதிய அரசியலைவரவேற்றஇந்தியா இரு நாடுகளுக்கிடையேயும் மேலும் நல்லுறவு நீடிக்கும் என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை புதிய யூகோசிலாவிய அதிபர் நெருக்கடிகால சபையொன்றை நியமித்துள்ளார்.

அடுத்த சில தினங்களில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள இப்புதிய தலைவரின் பதவிஉறுதிப்படுத்தப்பட இருப்பதாக பெல்கிறேட் வானொலி தெரிவித்துள்ளது. (து)

### சந்தன மரக்கடத்தல் வீரப்பனின்

## பிணையாளியை கைது செய்ய பெங்களூர் நீதிமன்றில் வழகது தாக்கல்

(பெங்களூர்)

சந்தன மரக் கடத்தல் காரன் வீரப்பனினால் பிணையாளியாக இருந்து தப்பியோடிவந்த உதவி திரைப்பட இயக்குநர் நாகப்பனை கைது செய்யுமாறு பெங்களூர் ரங்கசாமி பெங்களூர் நீதிமன்றம் ஒன்றில் வழக்குதாக்கல் செய்துள்ளார்.

கன்னட நடிகர் ராஜ் குமாருடன் பிணையாளியாக வீரப்பனிடமிருந்த உதவி இயக்குநர் நாகப்பன் தப்பி வந்ததும் தமிழ் நாட்டில் ஒரு கருத்தும் பெங்களூரில் ஒரு கருத்தும் கொடுத்து ஏமாற்றியிருக்கிறார் என்று ரங்கசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

உயர் நீதிமன்றம் மீதும் கர்நாடக அரசு மீதும் நாகப்பனை விசாரிக்கும்படி வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

நடிகர் ராஜ்குமாரின் உறவினரான நாகப்பன் வீரப்பனிடம்தப்பிவந்த செய்தியை மாறுபட்ட முறையில் சொல்லிவருவதால் மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்கள் எழுந்துள்ளன வென்றும் அவரை நீதிமன்றில் விசாரித்தால் உண்மைகள் எல்லாம் வெளிவரும் என்றும் வழக்குத் தொடுத்துள்ள ரங்கசாமி தெரிவித்தார். (க-து)

### உருக்கமான வேண்டுகோள்

(பெங்களூர்)

எங்கள் தெய்வத்தை இறப்பினிடமிருந்து மீட்க வேண்டும் என்று நடிகர் ராஜ்குமாரின் குடும்பம் ஆளுநரைக் கேட்டுக் கொண்டது.

நேற்று முன் தினம் கர்நாடக மாநில ஆளுநர்ராமாதேவியைச்சந்தித்தகர் நாடக நடிகர் ராஜ்குமாரின் மனைவி பருவதத்தம்மாவும் மூன்று மகள்மாரும் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டனர்.

வீரப்பனிடமிருந்து நடிகரை விடுவிக்க அரசு முயற்சித்து வருவது தெரிந்ததே. (து(

### இன்றைய தேர்தலையொட்டி

## யாழ். செயலகத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது

### சில வீதிகள் மூடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு நேற்று முதல் யாழ். செயலகத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

யாழ். நகரிலிருந்து கண்டி வீதியில் பஸ்ரியன் சந்தி முதல் கச்சேரி நல்லூர் வீதி ரெயில்வே கடவை வரையும் பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

செயலகத்திற்குள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

மேலும் தேர்தல் வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்கள் யாழ். செயலகத்திலும் யாழ். மத்திய கல்லூரியிலும் பணிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதே வேளை யாழ். ஆஸ்பத்திரி வீதி ஊடானபோக்குவரத்து முதலாம் குறுக்குத் தெரு சந்தியுடன் நிறுத்தப் பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-12)

### இடமாற்றம்

(கல்வயல்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் கடமையாற்றிய மகாதேவன் பதவி உயர்வுடன் பருத்தித்துறைச் சாலைக்கும்,

பருத்தித்துறைச்சாலை யில் கடமையாற்றிய கமலநாதன் கோண்டாவில் சாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (செ-111)

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

2 ஆம் வட்டாரம் நெடுந்தீவினை சொந்தமுகவரியாக கொண்ட பசுபதிதருமலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அடையாள அட்டைகளை ''வலம்புரி'' அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

### பாகிஸ்தான்

## முன்னாள் அமைச்சர் அஷாம் பேட்டிக்கு 14 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் தகவல் தொடர்பு அமைச்சர் அஷாம் பேட்டிக்கு 14 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுளளது.

நவாஷ்ஷெரிப் பின் அமைச்சரவையில் தகவல் தொடர்பு அமைச்சராக இருந்த அஷாம் பேட்டி இலஞ்சம் வாங்கிக் கொண்டு நியமனங்கள் கொடுத்ததாகவும் இதே வேளை வேறும் பல மோசடிகளில் ஈடுபட்டதாகவும் தொடரப்பட்ட வழக்கில் மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர்மேல் சுமத்தப்பட்ட தொலைத் தொடர்புகள் சம்பந்தமான குற்றச் சாட்டுகளுக்கு மேலும் 2 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதுடன் 21 வருடங்களுக்கு அரசியலில் ஈடுபட தடை உத்தரவும் நீதிமன்றம் வழங்கியுள்ளது. (து)

## பாக்.முன்னாள்பிரதமர்மீது மற்றொரு வழக்குத்தாக்கல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரான நவாஷ் ஷெரிப் மீது மற்றொரு வழக்குதாக்கலாகியுள்ளது.

நவாஷ்ஷெரிப் பஞ்சாப் மாநிலத்தில் முதல்வராக 1990இல் இருந்த பொழுது 150 கோடிரூபா பெறுமதியான நகர நிலங்களை அந்நாட்டு முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த299 பேருக்குகொடுத்தார் என்று அவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பஞ்சாப் நீதிமன்றில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும் இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்

# இலங்கையின் 11வது பாராளுமன்ற தேர்தல்

இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (செ-111)

கொள்ளலாம என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

சித்து வருவது தெரிந்ததே. (து(

1990இல் இருந்த பொழுது 150 கோடி ரூபா பெறுமதி

# இலங்கையின் 11வது பாராளுமன்ற தேர்தல் ஓர் கருத்துக் கண்ணோட்டம்

இலங்கையின் 11 வது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

இதில், 22 மாவட்டங்களில் 29 கட்சிகளும் 99 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

யாழ். மாவட்டத்தில், 14 அரசியல் கட்சிகளும் 6 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

நாடு முழுவதிலும் உள்ள 9 ஆயிரத்து 600 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

என்றுமில்லாத வகையில் 80 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## 225 உறுப்பினர்

225 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் தகுதியை ஒரு கோடி 20 இலட்சத்து 71 ஆயிரத்து 62 பேர் பெற்றுள்ளனர்.

மேற்படி 29 கட்சிகள் மற்றும் 99 சுயேட்சைக் குழுக்கள் சார்பாக 5 ஆயிரத்து 38 வேட்பாளர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலின் மூலம், கொழும்பு, கம்பகா, களுத்துறை மாவட்டங்களில் முறையே 20,18,10 உறுப்பினர்களும், கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் முறையே 12,5,7 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திகாமடுல்ல, திருகோணமலை மாவட்டங்களில் முறையே 9,6,7,4 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

## பஸ்வண்டிகள் சேவையில்

வாக்குப் பெட்டிகளை உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லல், வாக்காளர்களை வாக்குச் சாவடிகளிற்கு அழைத்துச் செல்லல் மற்றும் தேர்தல் தொடர்பான பணிகளுக்கென 2 ஆயிரத்து 200 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றைய தேர்தல் முடிவுகள் தமக்குச் சார்பானதாகவே அமையும் என ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சி என்பன அதித நம்பிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

ஆனால், எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாது, தொங்கு பாராளுமன்றம் ஒன்றே எதிர் காலத்தில் அமையப் போவதாக அரசியல் நோக்கர்கள் ஏற்கனவே ஆரூடம் தெரிவித்துள்ளனர்.

## அரசியல் நிர்ணயசபை

ஆனால் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தமக்கு கிடைக்காது விடினும், பாராளுமன்றத்தை அரசியல் அமைப்பு நிர்ணய சபையாக மாற்றி புதிய அரசியல் அமைப்பு மசோதாவை சட்டமாக்கி, ஐக்கிய தேசியக் கட்சியினை ஓரங்கட்டுவேன் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சவால் விடுத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும், இன்றைய தேர்தல்களின் போது, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு வாக்கு மோசடிகளில் ஈடுபட முயன்றால், யூகோஸ்லாவியா பாணியில் கிளர்ச்சிகள் வெடிக்கும் எனவும், நாடு முழுவதையுமே ஸ்தம்பிக்கச் செய்வோம் எனவும் எதிரணியினரான, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன கடும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அதேசமயம், தேர்தல் தினமான இன்று, நாடு முழுவதிலும் வன்செயல்கள் வெடிக்கலாம் என தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்கென இங்கு வந்துள்ள ஐரோப்பிய சங்கத்தினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேர்தல் முடிந்தவுடன் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படலாமெனவும் மேலும் அறியப்படுகிறது. (உ)

---

பஞ்சாப் நீதிமன்றில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும் இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் நவாஷ் ஷெரிப் கடும் தண்டனையை எதிர்நோக்க வேண்டி வரலாம் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-து)

---

## ஜெயலலிதா சாடல்

மத்திய ரயில்வே அமைச்சர் மம்தா பணார்ஜி பதவி விலகியதும், அவர் திரும்பப் பதவி ஏற்றதும் ஆளும் வர்க்கத்தினரின் நாடகமேயென்று தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி. மு. க பெற்றோலியவிலையேற்றத்தை ஆதரிப்பதாகவும் குறை கூறினார்.

அவர் மேலும் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கையில்;

அடுத்த மாதம் பெற்றோலிய விலையேற்றத்தை எதிர்த்து தமிழ் நாட்டு நகரங்களிலும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான ஆளப் படும்.
-குறள்-

வலம்புரி

## வாக்குரிமை

இலங்கைப் பாராளுமன்றத்தின் பதினோராவது பொதுத்தேர்தல் இன்று நடைபெறுகிறது. ஜனநாயகத்தின் ஒரே ஆயுதமான ''வாக்கைப்'' பிரயோகிப்பதன் மூலம் மக்கள் தமக்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தெரிவு செய்யப் போகும் மிக முக்கியமான நாள் இன்று.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்திலிருந்து இன்று வரை வாக்காளர்களுக்கு வழங்கப்படும் கௌரவம் சொல்லும் தரமன்று. வாக்காளர்களைக் காணுமிடமெல்லாம் வேட்பாளர்கள்கரம்கூப்பி வணங்குவார்கள். வீடு தேடி வருவார்கள், பலகாலம் அறிமுகமானவர்கள் போல் நடிப்பார்கள் இவையெல்லாம் இன்றுடன் முடிவடையப் போகின்றது.

நாளைவிடிந்துவிட்டால் நிலைமை தலை கீழாக மாறிவிடும். வென்ற வேட்பாளரை வெல்லவைத்தவர் வணங்க வேண்டும் வீடுதேடி வந்தவரை நாம் தேடி அலைய வேண்டும். இது ஜனநாயகத்தின் கட்டளை இதனை ஒரு கணம் நின்று நிதானமாக சிந்தித்தால், இந் நிலைமைகளை மக்கள் மாற்றியமைக்க முடியும்.

பொதுத்தேர்தலில் நானும் வேட்பாளர்என்ற பெருமைக்காகப் போட்டியிடுபவர்களை- மக்கள் படும் துன்பங்களைத் துணிந்து கூறமுடியாதவர்களை -சுய நலம் மிக்கவர்களைத் தெரிவு செய்தால் அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்கு நாமே நமக்கு வினையைத்தேடிக்கொண்டவர்களாவோம் என்

# சித்த வைத்திய முறையில் விதந்துரைக்கப்படும் அரியகருத்துக்கள் சமுதாயத்தை ஈடேற்றுமா?

மனிதனைப் படைத்த இறைவன் அவர்களின் வினைப்பயனுக்கு ஏற்ப பல நோய்களையும் படைத்தான்; அந்த நோய்களில் இருந்து மனிதன் குணமடைய மருந்துகளையும் படைத்தான். சித்தர்களுக்கு அவற்றை அருளிச் செய்து அவர்கள் மூலம் மக்கள் பயனடைய செய்தார்.

இப்படியாக இறைவனால் சித்தர்களுக்கு அருளிச் செய்யப்பட்டு சித்தர்களினால் மக்களிற்கு அறிந்து இவ் வைத்திய விபரங்கள் ஆரம்ப காலத்தில் ஏடுகளில் தான் எழுதப்பட்டிருந்தது; அவற்றைக் கற்றறிந்த வைத்தியர்கள் நூல்வடிவங்களாக்கி ஒவ்வொரு சந்ததியினரும் இலகுவாக கற்கக் கூடியவிதத்தில் உருவாக்கினார்கள். அதன் பயனாக இன்று எங்கள் மத்தியில் சித்த வைத்தியர்களும் சித்த வைத்தியசாலைகளும் பிரபலம் அடைந்து வருகின்றதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஆங்கில வைத்தியம் எங்கள் நாட்டில் பிரபலம் அடையாத காலங்களில் மக்கள் ஓர் ஊரில் இருந்து மற்றைய ஊருக்கு நோயாளியை கொண்டு செல்ல முடியாத நிலையில் தங்களூரில் இருக்கும் வைத்தியர்களை நாடி அவர்களால் கொடுக்கப்படும் மருந்துகளை மிகக்கவனத்துடன் பாவித்து சுகம் அடைந்ததை இன்றும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

### சித்தமருத்துவத்தின்சிறப்பு

சித்த வைத்தியத்தின் விசேஷம் என்ன என்றால் பக்க விளைவுகள் ஏற்படாது எந்த நோய்க்குப் பாவிக்கப்படுகின்றதோ அதன் நோயை குணமாக்குவதுடன் நோயாளியை பாதிக்காது இன்னும், தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதாகும்.

இன்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்ட மருந்துகளே குறிப்பிட்டுள்ளபடி பக்குவம் செய்ப்பட்டு இன்றும் வைத்தியர்களால் பாவிக்கப்படுகின்றது. அன்றைய காலங்களில் எப்படி குணங்களை அம் மருந்துகளால் மக்கள் அடைந்தார்களோ அதே போன்று இன்றும் பயனடைகின்றார்கள்;

சித்த மருந்துகளிலே பல விதமான சரக்குகளும் மூலிகைகளும் பயன்படுத்தப்படுகின்றது. அப்படியான சரக்குகளோ மூலிகைகளோ அவற்றுக்குரிய அளவுகளின் படியே பாவிக்க வேண்டும் கூடவோ அன்றிக் குறையவோ இருந்தால் அவற்றின் பயன்கள் மாறுபடும். அதனால் இம் மருந்துகள் மிக அவதானத்துடன் செய்யப்படுகின்றது

உணவின் மூலம் அன்றாடம் மக்கள் பாவிக்கும் சரக்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணங்களைக் கொண்டதாகும் இதை சித்தவைத்தியவாகடங்களில் அறியலாம்;

அப்படியான சரக்குகளை அதன் தன்மையறிந்து எவற்றுடன் எவை சேர்த்தால் பயன் பெறலாம் என்பதை அறிந்த வைத்தியர்கள் ஒவ்வொரு நோய்க்குரிய சரக்குகளை சேர்த்து மாத்திரைகளாகவும் சூரணங்களாகவும் தயாரித்து அவற்றுக்கு குறிப்பிட்ட அனுபானத்துடன் (குடிநீர்) கொடுத்து நோயைகுணமாக்குகின்றார்கள் இம்மருந்துகள் மிகக் கசப்பானது என்பதனால் மக்கள் இவைகளைப் பாவிப்பதில் பின்னடைகின்றார்கள்.

### சுவையின் தன்மை

ஆறு சுவைகளையும் படைத்த இறைவன் இச் சுவைகளினால் மக்களை நன்மையடைய வைத்து மற்றைய சுவைகளினால் அதாவது இனிப்பு, உப்பு, புளிப்பு, உறைப்பு, துவர்ப்பு, கசப்பு என்றும் சுவைகளில் கசப்பு தவிர்ந்த மற்றைய சுவைகளினால் கூடுதலாகபாவிப்பதனால் உடலுக்கு கெடுதியையும் கசப்பு சுவையினால் உடலுக்கு நன்மையையும் ஏற்படுத்தி இருக்கின்றார் ஒவ்வொரு சுவையும் ஒவ்வொரு அளவாகச் சேரும்போது நாவிற்கும் மனத்திற்கும் வயிற்றிற்கும் இதமாக இருந்தாலும் இச் சுவைகளைக் கூடுதலாகப் பவித்தால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோயைக் கொடுக்கும்;

கசப்பு சுவை என்பது அதிகம் பாவிக்க முடியாத ஒன்று அத்துடன் அது உடலுக்கு கேடு விளைவிக்காமல் நன்மையே செய்யும்.

### ஒழுங்கும் பத்தியமும்

இந்த வைத்தியத்திற்கு மக்கள் கறுப்பு வைத்தியம் எனவும் பெயரிட்டு அழைக்கின்றார்கள் கறுப்பு வைத்தியத்திற்கு சென்று அம் மருந்துகளைப் பாவிக்கும் பொழுது பத்தியம் இருக்கவேண்டும் என்று எண்ணி இவ் வைத்தியத்தை மக்கள் நாடுவது குறைவு.

பத்தியம் இருப்பது மருந்துக்கு இல்லைதங்கள் நோய்க்கு என்பதை நோயாளி உணருவதில்லை.

பல பதார்த்தங்களை சக்தி செய்யும் பாவற்காய் மருந்துகளை முறிக்கும் தன்மை வாய்ந்தது. என்பதனால் அவற்றை நீக்கும் படி வைத்தியர்கள் கூறுவார்கள் மற்றவைகள் அவர்களின் நோய்க்கேற்றவாறு கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்பதே பத்தியம் என்பதாகும்;

நீரிழிவு நோயாளி சீனிப் பதார்த்தம் இழங்குவனகள் பாவிக்கக்கூடாது என்றால் அது பத்தியம். இரத்த நோயாளி தக்காளிப்பழம், கத்தரிக்காய் போன்றவைகளைச் சேர்க்கக்கூடாது. என்றால் இது மருந்திற்கு பத்தியமில்லை. நோய்க்கே பத்தியமாகும், அடும்சாளி காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் பழங்கள், உணவுவகைகளைத் தவிர்த்தல் பத்தியமாகும்.

இப்படியே ஒவ்வொரு நோய்க்கும்ஒத்துக் கொள்ளாத உணவுவகைகளைநீக்க வேண்டும், என்பதை சித்த வைத்தியர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட விதிகளின் படி கூறுவார்கள்.

இதன் நன்மைகள் என்னவென்றால் நோயாளி தனது நோய்க்கு ஏற்ற பக்குவமாக நடப்பதன் மூலம் தனது நோயினின்றும் விரைவில் குணமடைவதும மட்டுமன்றி மீண்டும் அந் நோய் பீடிக்காமல் இருப்பதுக்கு என்பதாகும்;

இவைகளே சித்தவைத்தியமும் பத்தியமும் மக்களுக்கு காட்டும் நன்மையாகும்.

திருமதி எஸ். அருமைநாயகம்

## மருத்துவ விளக்கம்

சகஜநிலை என்ற மாயத்தோற்றத்தை

# யாழ். குடாநாட்டில் ஏற்படுத்த

# நிர்வாகிகள் படாதபாடு படுகின்றனர்

அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்கு நாமே நமக்கு வினையைத்தேடிக்கொண்டவர்களாவோம் என்பதையாரும் மறந்துவிடக் கூடாது.

வாக்குரிமை என்பது ஜனநாயகம் நமக்குத்தந்த சுதந்திரம் அதனை தகுந்த முறையில்-துஷ்பிரயோகம் செய்யாது பயன்படுத்துவதன் மூலமே நாட்டிற்கும் நமக்கும். நம் எதிர்கால சந்ததிக்கும் நல்லதை செய்ய முடியும்.

போட்டியிடுபவர்களில் யார் சிறந்தவர், நல்லதை செய்பக் கூடியவர்- என்பதில் வாக்காளர்கள் தெளிவடையும் போது அவர்கள் தம்வாக்குரிமையை சரியாகப் பிரயோகிக்க முடியும்.

தெரிந்தவர், அறிந்தவர் ஊற்றித்தந்தவர்என்றெல்லாம் நன்றிக்கடன் தீர்க்க நினைப்பதை தவிர்த்து உண்மையை உணர்ந்து வாக்குரிமையைப் பிரயோகிப்பது வாக்காளர்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

---

## அரசசார்பற்ற இணையம் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் சகஜ நிலை தொற்று விக்கப்பட்டு விட்டது என்ற மாயந்தோற்றத்தை உருவாக்குவதில் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் கொழும்பில் உள்ள மனிதநேய அமைப்பிற்கு அனுப்பிவைக்கப்பட்ட குடாநாட்டு நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது; இடம் பெயர்ந்தோர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் இன்னமும் முழுமையாக தீர்க்கப்படவில்லை.

குடாநாட்டின் யுத்தமுனையில் பகல் இரவு வேளைகளில் ஏவப்படும் ஆட்லறி எறிகணைகளாலும், குண்டு வீச்சுக்களாலும் மக்களுடைய வாழ்க்கையும், பிள்ளைகளுடைய கல்வியும் துபரிய அளவில் பறிப்படைம்ள்ளது. இருதய நோயாளர்களும் இச்சத்தங்களால் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்.

### உணவற்ற பொருட்கள்

இடம்பெயர்ந்தோர் நலன் பேண் முகாம்களில் தங்கியிருபவர்களுக்கும் வெளியில் தங்கியுள்ள வர்களுகள் மிகக் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களுக்கும் சர்வதேச அரசசார்நற்ற நிறுவனங்களாலும் ஐ. நா. அமைப்புகளினாலும் வழங்கப்பட்டு வந்த உணவற்ற பொருட்களின் விநியோகத்தினை மேற்படி அமைப்புகள் நிறுத்யுள்ளன.

இந்தநிலையில் இத்தகைய குடும்பங்களுக்கு உணவற்ற பொருட்கள் வழங்கப்படவிருலை: அதுமட்டுமல்லாமல் இவை வழங்கப்படவர்களிடையே பாரபட்சமும், வேறுபாடுகளும் காட்டப்பட்டுள்ளன வழங்கப்பட்ட பொருட்கள் கூட இடம்பெயர்ந்தவர்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூடப் பயன்பட வில்லை

### இருப்பிடத்திட்டம்

இடம்பெயர்ந்தவர்களுக்கான மலசல கூடங்ள் அமைக்கும் திட்டத்தில்பின்னடைவுகள் தென்படுகின்றன. மல சல கூடங்கள் வடிவமைப்பில் நிறுவனத்துக்குநிறுவனம் வேறுபடுகின்றன.

சில நிறுவனங்கள் 15 வீடுகளுக்கு ஒரு மல சல கூடத்தினையும் ஏனையவை 25-30 பேருக்கு ஒரு மல சல கூடம் என்ற நிலையில்அமைத்துவருகின்றன. இதுவிடயம்தொடர்பான அங்கீகாரத்தையும் அனுமதியையும் வழங்குகின்ற அதிகாரம் மாவட்ட நிர்வாகத்தினருக்கு இருக்கின்ற போதிலும் அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை.

இடம் பெயர்ந்தவர்களில் சுமார் 90 சதவீதத்தினர் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் வீடுகளிலேயேதங்கியுள்ளனர். இத்தகைய இடங்களிலுள்ள மல சல கூடங்கள் யாவும். அவசியம் திருத்தம் செய்யப்பட வேண்டியவையாகும்ஆனால்யாருமேசெய்யவில்லை. வலிகாமம் பிரதேசத்தில் மல சல கூடங்கள் திருத்தும் பணியில் யுனிசெவ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

ஆனால் வடமராட்சியில் தங்கியுள்ள 8 ஆயிரம் குடும்பகளுக்கு இத்தகைய திருத்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை,

### கல்வி

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வந்தமாணவர்கள் தமது பாடப்புத்தகங்கள்மற்றும் குறிப்பேடுகளைத் தம்முடன் எடுத்து வராமையினால்பெரிதும்கஷ்டமடைந்துள்ளனர். ஆதலால் உளவியல் ரீதியான பாதிப்புக்களை அவர்கள் முகம் நோக்கியுள்ளனர்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சு-77)

---

## நாய்களால் தொல்லை

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாய்களின் தொல்லைகள் வெகுவாக அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக யாழ். நகரை உள்ளிட்ட கஸ்தூரியார்வீதி, நாவலர்வீதி, பரித்தித்துறை வீதி, ஆகிய பகுதிகளில் அலைந்து திரிவதுடன் பாதசாரிகளுக்கு இந் நாய்களின் தொல்லை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(சு-111)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



## நியூசிலாந்து அணியிடம் சிம்பாவே தோற்றது

நைரோபியில் நடைபெறும் மினி உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி தொடரின் நேற்றைய ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 64 ஓட்டங்களால் சிம்பாவே அணியை தோற்கடித்தது.

முதலில் களமிறங்கிய நியூசிலாந்து 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கற்றுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 42.2 ஓவர்களில் அனைத்து விக்கற்றுக்களையும் இழந்து 201 ஓட்டங்களை மட்டுமே பெற்று கோட்டை விட்டது.

## வாக்காளர் அட்டைகளை இன்றும் பெற்றுக் கொள்ளலாம்

### யாழ். தபாலகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
பாராளுமன்றத் தேர்தலுக்காக இதுவரை வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத பொதுமக்கள் இன்று செவ்வாய்க் கிழமை தமது வாக்காளர் அட்டைகளை தபாலகங்களில் பெற்று வாக்களிக்க முடியுமென்று யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

26 ஆயிரத்து 262 வாக்காளர் அட்டைகள் அடங்கிய பொதிகளில் நேற்று முன் தினம் மட்டும் 7 ஆயிரத்து 943 அட்டைகள் விநியோகிக்கப்பட்டதாகவும் நேற்று பெருமளவில் வாக்காளர் அட்டைகளை பொதுமக்கள் யாழ். பிரதமதபாகலத்தில் பெற்றுச் சென்யதாக யாழ். பிரதான தபாலக அதிகாரி தெரிவித்தார். (க-3)

## இன்றைய தேர்தலில் ஐக்கிய.தேசிய கட்சிக்கே வெற்றிவாய்ப்பு அதிகம்

### சண்டேரைம்ஸ் கருத்து கணிப்பு

(கொழும்பு)
இன்று நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும்அரசியல் கட்சிகளின் பிரதான வேட்பாளர்களிடம்,கட்சிகளுக்கு கிடைக்கக்கூடிய ஆசனங்கள் பற்றி ''சண்டேரைம்ஸ்'' பத்திரிகை நிருபர்பேட்டி கண்டுள்ளார்.

அப்பேட்டியில்; ஐக்கியதேசியக்கட்சிக்கு 125 தொடக்கம் 135 வரையான ஆசனங்களும், பொதுஜன ஐக்கிய முன்னணிமட்டும் 119ஆசனங்களும், ஜனதா விமுக்தி பெரமுன 10ஆசனங்களும், தேசிய ஐக்கிய முன்னணி 10 ஆசனங்களும், லிபரல் கட்சி 4அல்லது 5 ஆசனங்களும் கிடைக்கும் என அதன் பிரதான வேட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பூமி புத்திரக்கட்சி 15 ஆசனங்களும் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ந)

**யாழ்...**
யாளர்களும் அடங்குவர்.
யாழ்ப்பாணம் வந்த இச் செய்தியாளர் குழு நகரில் மக்களைச் சந்தித்து தேர்தல் காலத்தில் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு, மக்களின் மன நிலை, குடாநாட்டு நிலவரங்களையும்அறிந்ததுடன், யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைஅறிந்து கொண்டனர். (ந-4-12)

**மட்டக்களப்பில் ...**

## நிலக் கண்ணியில் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)
பெரியவிளான் பகுதியில் நிலத்திற்கடியில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணியில் சிக்கியதில் பொதுமகன் ஒருவர் தனது காலை இழந்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி விறகு சேகரிக்கச் சென்ற போதே இவ் அனர்த்தம் இடம் பெற்

பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன்

# யாழ். தேர்தல் பணியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)
இன்று நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு யாழ் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 468 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகளும், தேர்தல் அலுவலர்களும் பலத்த பாதுகாப்புடன் நேற்று வடபிராந்திய போக்குவரத்து பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஜீப் வண்டிகளில் பொலிஸார் பாதுகாப்பு வழங்கி முன்னே செல்ல பஸ்வண்டிகள் அதனைத் தொடர்ந்து சென்றன.

யாழ். கண்டி வீதி மற்றும் யாழ். பஸ் நிலையம் காங்கேசன் துறை வீதி ஆகிய இடங்களில் பொலிஸார் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர் கச்சேரிப் பகுதிக்கான பாதைகள் அடைக்கப்பட்டு இராணுவமும் பொலிஸாரும்தீவிரரோந்தில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். செயலகத்தில் தேர்தல்சம்மந்தமானபணிகளைத் தவிர வேறு எந்தவிதமான பணிகளும் இடம் பெறவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

**நாகர் கோவில்.**
யம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட துருப்பினர் மேற்கொண்ட இத்தேடுதல் நடவடிக்கையின் போது எல். எம். ஜி. ரக ஆயுதம் மற்றும் ரி-56 ரக ஆயுதங்கள் படையினரால் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சரசாலைப் பகுதியிலும் விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதல் இடம்பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

**யாழ் செயல...**
திக்கப்படவில்லை.
செயலகத்தை அண்டிய வீதிகள் யாவும் பலத்த பாதுகாப்பு மேற்கொல்லப்பட்டதுடன் வீதியில் போவோர் வருவோர் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

இதேவேளையில் சில வீதிகள் பாதுகாப்புக் கருதி மூடப்பட்டதாகவும் அறியப்படுகிறது. (க)

**புலிகள்...**
- சம்பத் (வர்மலிங்கம் குமணன்) யாழ்ப்பாணம்
- எழில்வதனி (இராசா நாகேஸ்வரி) பரந்தன்
- முகிலன் (சண்முகவேல் தமிழ்ச்செல்

## தமிழக முன்னாள் முதல்வர் 'ஜெயா' விற்கு மூன்று வருடங்கள் சிறைதண்டனை

[புதுடில்லி]
ரான்சி நிலபேர ஊழல் வழக்கு தொடர்பாக தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா மற்றும் 5 பேருக்கு ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சென்னை தனி நீதிமன்ற நீதிபதி பி. அன்பழகன்நேற்று மேற்படி தீர்ப்பினை வழங்கினார்.

இருப்பினும், மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மனுச் செய்வதற்காக, வழங்கப்பட்ட தீர்ப்பின் அமுலை அடுத்த மாதம் 7-ஆம் திகதி வரை நிறுத்தி வைப்பதாக நீதிபதி அறிவித்துள்ளார்.

8 ம் பக்கம்பார்க்க→

## தனியார்பஸ் சேவையுடன் இணைந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை இலவச பஸ் சேவையை நடாத்தும்

(யாழ்ப்பாணம்)
இன்று நடைபெறஇருக்கும் தேர்தலை ஒட்டி வடபிராந்திய போக்குவரத்து சபை தனதுவழமையானபயணிகள் பஸ்சேவையைநடாத்தமாட்டாது.

எனினும் யாழ். தெரிவத்தாட்சி உத்திரோயகத்தரின் ஏற்பாட்டின் கீழ் யாழ். தனியார் பேருந்து உரிமையாளர்களுடன் இணைந்து பயணிகள் பஸ்சேவையை நடாத்தவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் வி.எஸ் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இணைந்த இந்த பஸ் யேசவைல் வாக்காளர்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என்றும், தேர்தல்முடிந்ததும் 11 ம் திகதி வடபிராந்திய போக்குவரத்து சபை தனது வழமையான பஸ் சேவையைநடாத்தும் என தெரிவித்துள்ளனர். (வ-க-12

**லொறி..**
இதன் போது நாவலர் வித்தியாலயத்தின் பின்புறமாகவுள்ள பாதையால் வந்த அதிபரும், மற்றும் வீதியால் வந்து கொண்டிருந்த பாதசாரிகளும் லொறிக்குள் சிக்குண்டனர்.

இவ் விபத்தில் ரஞ்சித் (வயது 22), ஏ.ஆர்.ஏ.றாபிக் (வயது 23), எ. சி. காதர் (வயது50), எம்.கருணாநிதி (வயது34), ஆர். சிறிகாந்

## புங்குடுதீவில் நிலக்கண்ணி மீட்பு

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவுப் பகுதியில் இராணுவத்தினர் அண்மையில் மேற் கொண்ட தேடுதல்நடவடிக்கையின் போது 21 கிலோகிராம் நிறையுடைய நிலக்கண்ணி மீட்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

தரிசு நிலப்பகுதியிலிருந்தே இன் நிலக்கண்ணி மீட்கப்பட்டதாகமேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-வ)

**ஆசியை---**
வும தேர்தல் நடைபெறுகின்றதா என்பதைக்கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்புக்கு பல்வேறு உலக

## மட்டக்களப்பில் ...

யில் காணப்பட்டன.

தமிழ் ஈழ சுதந்திர மாணவர் முன்னணி ஏற்பாடு செய்துள்ள இக் ஹர்த்தால் நிகழ்வானது இன்று நடைபெறும் தேர்தல் வடக்கு - கிழக்கு மகாணத்தினர் பங்கு கொள்வதை எதிர்த்துமே இக் ஹர்த்தால் இடம் பெற்றதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

வேலை வாய்ப்பு வழங்குவதாகக் கூறி சிங்களக் கட்சிகள் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களை ஏமாற்றி வந்ததை எதிர்க்கும் முகமாகவும் இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாம். (க-வ-ப)

## மலையகத்

கமும் கைகோர்ந்துவிடும்என்ற அச்சம் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கியமுன்னணியும் மலையக மக்களுக்கு குடியுரிமைகளை வழங்கியது. இதற்கு அடிப்படைக் காரணம் புலிகளின் தலைவர் பிரபாகரனின் போராட்டமே எனவும் அவர் தெரிவித்தார்.

(ந)

கடந்த 8 ஆம் திகதி விறகு சேகரிக்கச் சென்ற போதே இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளதாக மேலும் அறியப்படுகிறது. (க-25)

## கிளாலிப்...

லுக்கு படையினர் மோட்டார் தாக்குதலை நடத்தியதாகவும் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் குறித்த தகவல் எதுவும் தெரியவரவில்லை. (வ-க)

## அரசாங்கம்...

போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் கட்சிகளின் ஆதரவாளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுமதிக்கவிடாது இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டால் மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்றும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(ந-4)

- முகிலன் (சண்முகவேல் தமிழ்ச்செல்வன்) மாத்தளை
- செந்தமிழ் (தங்கராசா பிரபாசுதன்) புதுக்குடியிருப்பு
- உருத்திரன் (உருத்திரானந்தன் சிவானந்தன்) கிளிநொச்சி
- பரமன் ரவிச்சந்திரன் (காவல்துறை தலைமைக் காவலர்) யாழ்ப்பாணம் எல்லைப்படை வீரர்
- பாமா (சின்னத்தம்பி வர்ணகுலசிங்கம்) மட்டக்களப்பு

ஆகியோரும்

கல்வயல் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது

- செல்வி (இராசரத்தினம் சுலக்சனா) யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (வ-4)

### பிந்திய செய்தி

# தடம்புரண்ட லொறி எரிகிறது

இரண்டு பொதுமக்களைப் பலியெடுத்த லொறி தடம்புரண்ட இடத்தில் தீ வைத்து கொழுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(வயது 23), எ. சி. காதர் (வயது50), எம் ·கருணாநிதி (வயது34), ஆர். சிறிதரன் (வயது 23) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சாரதியும், கிளினரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை சம்பவ தினத்தன்று லொறியை ஓட்டிவந்த முஸ்லிம் சாரதி மதுபோதையில் காணப்பட்டதாக சம்பவத்தை நேரில் ர்ார்த்த மக்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் இடம் பெற்ற இடத்தில் தேங்கி நின்ற வெள்ளத்துடன் இறந்தவர்களின் இரத்தமும் கலந்துகாணப்பட்டது. (வ-4)

## தமிழர்களை.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில்ஜேர்மனி வாழ் அனைத்து தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு ஜேர்மனிய மனித உரிமைஅமைப்புக்கள் கேட்டுள்ளது.

அரசியல் அந்தஸ்து நிரகரிக்கப்பட்ட நிலையில் சுமார் 6 ஆயிரம் தமிழர்கள் அங்கே தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

றதா என்பதைக்கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்புக்கு பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்களும், சுமார் 300 உள்ளூர் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்புக்கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல் பிரசாரத்தின் போது ஆயிரத்துஐந்நூறிற்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகளை அடுத்து நாடு பூராகவும் சுமார் 35 ஆயிரம் பொலிசார் தேர்தல் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களைவிட மேலும் சுமார் இருபதினாயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போலிவாக்குகளையும், கள்ள வாக்குகளையும் கூடுமானவரை தவிர்ப்பதற்குதேர்தல் ஆணையாளரினால் இத்தேர்தலில் வாக்குச் சீட்டுகளில் ''ஸ்ரிக்கர்'' ஒட்டும் நடைமுறை அமுல் படுத்தப்படவுள்ளது

இதேவேளை வாக்குப் பெட்டிகளில் கள்ள வாக்குகள் பேடப்பட்டிருக்கிறதா என்பதை அறிய அதற்குரிய கருவி ஒன்றையும் தேர்தல் ஆணையம் பயன்படுத்தவுள்ளதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

(வ-க)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.